Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை -25 08-02-2004 ஞாயிற்றுக்கிழமை ஓசை -355

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்


MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கனினி முறை வீடியோ ஈடிற், பாடல் பதிவுகள், படம் பிரேம்செய்தல்,

அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ் சாலை, கிளிநொச்சி. (சி-8689)

R.V பந்தல் சேவை, தர்மபுரம்.



## வடக்கு-கிழக்கிற்கான அபிவிருத்திக்கு ஐரோப்பிய யூனியன் தொடர்ந்து உதவும்

### அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பில் ஐரோப்பிய பா.உ.

(புறூசல்ஸ்)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியின் அபிவிருத்திக்கான அவசர உதவிகளை வழங்கும் விடயத்தில் தொடர்ந்து எல்லையற்ற ஆதரவு வழங்கப்படும் என்று ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான ஜோன்வோல்ஸ்குஸ்ணர்கான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினருக்கு அவர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

இலங்கையின் தென்பகுதியில் நிலவும் நியாயமற்ற நிபந்தனைகளை மதியாது வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு உதவவுள்ளோம். இதை வடக்கு கிழக்கிலுள்ள அமைப்புக்களினூடாக செயற்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் வாஷிங்டனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வலியுறுத்துவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குகிழக்கு மக்கள் முகங்கொடுக்கும் அவசரதேவைகளுக்கு உதவவேண்டும் என ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கேட்டுக்கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழு வடக்கு-கிழக்கு மக்களின் இயல்பு வாழ்வு திரும்புவதற்கான அபிவிருத்தித் திட்டங்களையும் முன்வைத்து விளக்கியது. இத

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றக்கலைப்புக் குறித்து கொழும்பில் பல்வேறு ஆரூடங்கள்

## அமைச்சரவையை சந்திரிகா பொறுப்பேற்கலாம்

(கொழும்பு)

**கொழும்பு அரசியலில் நாடாளுமன்ற கலைப்புக் குறித்து பல தரப்பில் இருந்தும் பல்வேறுபட்ட தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பொறுத்த வரையில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாகத் தேர்தல் ஒன்றுக்குச் செல்லுமாறு சனாதிபதியை வலியுறுத்தி வருகின்றனர். இதேவேளை அமைச்சரவையை சனாதிபதி பொறுப்பேற்கலாம் எனவும் ஊகம் தெரிவிக்கப்படுகிறது.**

மக்கள் விடுதலை முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கூட்டமைப்பை மேற்கொண்டதை அடுத்து அந்தக் கூட்டமைப்பில் இருந்தும் உடனடித் தேர்தல் ஒன்றுக்கு சனாதிபதிக்கு வற்புறுத்தப்பட்டுவருகிறது.

இந்நிலையில் சனாதிபதி செயலகத்தில் இது தொடர்பில் பல சந்திப்புக்கள் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சனாதிபதி தேர்தல் ஆணையாளருடனும்நேற்றுசந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.இதேவேளை நாடாளுமன்றம் நேற்று இரவு கலைக்கப்படலாம் என்ற எதிர்வுகூறல் ஏற்கனவே உருவாகியுள்ள நிலையில்.

அமைச்சரவையை சனாதிபதி பொறுப்பேற்கலாம் என்ற செய்தியும் வெளியிடப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண சபையின் காலம் நேற்று முன்தினத்துடன் நிறைவுற்றது. நாடாளுமன்றத் தில் அண்மையில் நிறைவேற்றப் பட்ட சட்டத்தின் படி அனைத்து மாகாண சபைகளின் தேர்தலும் ஒன்றாக நடத்தப்பட வேண்டும் என்பதால் இன்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

### - உரமானியம் கோரி போராட்டம் நடத்திய -

## உண்ணாவிரதிகள் பொலிசாரால் அகற்றல் வேறோரிடத்தில் உண்ணாவிரதம் தொடர்கிறது

(கொழும்பு)

உரமானியம் வழங்கவேண்டும் என்று கோரியும், உரத்தின் விலையைக் குறைக்கவேண்டும் என்று கோரியும்நேற்றுமுன்தினம் கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடத்தப்பட்டுவந்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியோரை நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிசார் அகற்றியுள்ளனர்.

இதனால் பொலிசாருக்கும் உண்ணாவிரதிகளுக்குமிடையில் பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது. எனினும் அந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்கின்றது.

தற்போது அதே பகுதியிலுள்ள மற்றுமோர் இடத்தில் மேடை ஒன்று அமைத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். இதில் 65வயது மூதாட்டி உட்பட 15பேர் ஈடுபட்டுவருவது குறிப்பிடத் தக்கது. (32)

## யாழ்.குடாநாடு விடுதலைப் போராட்டத்தில் புதியவரலாற்றைப் பதிக்க வேண்டும்!

### -துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன்

தமிழீழப் போராட்டத்தில் யாழ். குடாநாடு புதிய வரலாற்றைப் பதிக்க வேண்டும் என்று தமிழீழ துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊர்காவற்றுறையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.குடா நாட்டில் இடம் பெறும் சம்பவங்கள் கவலையளிப்பதாக உள்ளன. பலாத்காரம், மதுபாவனை, போதைப் பொருள்பாவனை, விபச்சாரம் என்று பல்வேறு தீய செயற்பாடுகள் இம் மண்ணில் திட்டமிட்டு நடைபெற்று வருகின்றன.

இவற்றை சீர் செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும், தேசிய எழுச்சிப் பேரவையிடமே உள்ளன. தாயக விடுதலைப் போராட்டம் தொடர்பான நியாயத் தன்மைகளை உலகிற்குத் தெரிவிக்க வேண்டிய தேவை தேசிய எழுச்சிப் பேரவையிடம் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இச் சங்கம நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றது.

### -சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று-

## கறுப்புக்கொடி கட்டியதாகக் கூறி மீனவர் மீது படையினர்கெடுபிடி

(வடமராட்சி)

சிறிலங்காவின் சுதந்திர தினத்தின்போது வடமராட்சி வடக்குக் கரையோரப்பகுதிகளில்கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்ட மீனவர்களைப் பற்றி தகவல் தருமாறு படையினர் அச்சுறுத்தி வருகின்றனர்.

சுதந்திரக் கொண்டாட்டங்களுக்கெதிராக பருத்தித்துறை மற்றும் சக்கோட்டைக் கரையோரங்களில் இரவோடிரவாக கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டிருந்தன. எனினும் இக் கொடிகளை மீனவர்களே கட்டியதாகத் தெரிவித்துள்ள படையினர் அவர்கள்தொடர்பான விபரங்களைத் தருமாறு ஏனைய மீனவர்களை நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

அவ்வாறு தகவல் தராவிடின் மீனவர்களை மீன் பிடித்தொழிலுக்கு செல்லவிடாது தாம் தடுக்கப்போவதாக கரையோரக் காவலரண்களில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாகனம்-உந்துருளி விபத்தில் உந்துருளியில் பயணித்த இருவர் பலி

(அலுவலகசெய்தியாளர்)

வாகனமொன்றும் உந்துருளியும் மோதிக்கொண்டதில் உந்துருளியில் பயணித்த இருவரும் பலியாகினர்.

மேற்படி சம்பவம் நேற்று பிற்பகல் 2.00மணியளவில் மாங்குளம் துணுக்காய் குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புளியங்குளத்திலிருந்து மாங்குளம் நோக்கிப் பயணித்த உந்துருளியும் மாங்குளத்திலிருந்து புளியங்குளம் நோக்கி பயணித்த வாகனமும் மாங்குளம், புளியங்குளம் ஏ-9 வீதியின் தச்சுக்குளப் பகுதியில் வைத்து ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் உந்துருளியில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்திய பொழுதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமாகினர்.

கணபதிப்பிள்ளை நாகேந்திரராசா (வயது54) 4ஆம் வட்டாரம் வேலணைகிழக்கு, தர்மலிங்கம் செல்வக்குமார் (வயது32) சங்கத்தை வட்டுக்கோட்டை ஆகிய இருவருமே மேற்படி சம்பவத்தில் மரணமானவர்களாவர்.

தமிழீழ வீதிப்போக்குவரத்து காவல்துறையினர் விபத்து சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



விபத்தில் பலியானோர்

## வரி விளம்பரம்

### மாடு காணவில்லை

M.L.சிவப்புகுறி, K.L.குறிகறுப்பு சிவப்பு கலந்த எருது மாடு இரண்டையும் கண்டவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது கிளிநொச்சி காவல் துறையில் தெரிவிக்கவும்.தகவல் K.சேகர், 416,ஜெயநதிநகர். (4217)

### செலவுச்சீட்டைகள் தவறியமை

உப்பு உற்பத்திநிறுவன படிவம் 12A தொகுப்புடன் கூடிய செலவுச்சிட்கைள் 07.02.2004. தினம் நிறுவனத்தில் இருந்து த.பொ.மே.நிறுவன மாவட்டச் செயலகம் கிளிநொச்சி செல்லும் போது தவறிவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உப்பு உற்பத்தி நிறுவனம், பரந்தன்,கிராமியஅபிவிருத்திவங்கி கிளிநொச்சி காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். (4220)


# முல்லையில் ஊரக வளர்ச்சிப்பணியினரால் நான்கு கிராமங்கள் புனரமைப்பு

அரசியல்துறையின் ஊரக வளர்ச்சிப் பணியினரால் முல்லை. மாவட்டத்தில் சூரிபுரம், நாவற்காடு, பூதன்வயல், ஆறுமுகத்தான் குளம் ஆகிய கிராமங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் முதன்மையான திட்டமாக மாணவர்களின் கல்விமேம் படுத்தலுக்கான இரவு நேர கல்வி நடைபெறுகின்றன. இதற்கென ஒளிவழங்கும் சூரிய சக்தியின் பிறப்பாக்கியை ரெக் நிறுவனம் வழங்கியுள்ளது.

மின் ஒளிமூலம் சூரிபுரத்தில் 65, நாவற்காட்டுக்கிராமத்தில் 75, பூதன் வயல்கிராமத்தில் 125, ஆறுமுகத்தான்குளக்கிராமத்தில் 80 என மொத்தமாக 345 மாணவர்கள் இரவு நேரக்கல்வியினை மெற்கொள்கின்றனர்.

தொழில் முயற்சி செய்வோர்களுக்கான கடனினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி வழங்கிவருகின்றது.

அத்துடன் காணி உள்ளவர்களுக்கு, காணி உரித்தாவணம் பெற்றுக் கொடுத்தல் என்பன போன்ற வேலைகளை முன்னெடுத்துச் செல்வதாக தமிழீழ ஊரக வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் அன்பரசன் தெரிவித்தார்.

இதேபோன்று சகல தமிழீழத்திற்குட்பட்ட மாவட்டங்களிலும் இவ்வாறான பின்தங்கிய கிராமங்களை கண்டறிந்து அபிவிருத்தி அடையச் செய்வதே எமது பணியாகும் எனவும் தெரிவித்தனர். (20)

### -உருத்திரபுரத்தில் விமானப்படையின்-

# குண்டுவீச்சில் கொல்லப்பட்ட பொது மக்களுக்கு அஞ்சலி

1991ம் ஆண்டு 02ஆம் மாதம் 04ஆம் திகதி அன்று கிளி/ உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட 09 அப்பாவிப் பொது மக்களின் நினைவாக உருத்திரபுரம் கூழாவடிப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் கடந்த புதன் காலை நினைவஞ்சலி நிகழ்வில் நடைபெற்றது. இந் நிகழவில்09நினைவுத் தூபிகளுக்கும் பெற்றோர் உரித்துடையோர் மலர் மாலைகளை அணிவித்து மலரஞ்சலி நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளி.பிரதேச அரசியல் துறையினர், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# யாழ்.பல்கலை விளையாட்டரங்கில் மகளிருக்கான விளையாட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையினரின் ஆதரவில் யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவினரால் மகளிருக்கான விளையாட்டுவிழா நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுவிழா நாளையும், நாளை மறுதினமும் (தாயகநேரம்) காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து விளையாட்டினை கண்டு களிக்கும் வண்ணம் யாழ். மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வைத்தரக் கூடிய சிங்களத்தலைவர்கள் ஒருவர்கூட இந்த நாட்டிலில்லை

## தமிழ் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்

(திருகோணமலை)

இலங்கை அரசியலில் விடுதலைப்புலிகளைத் தவிர தென்பகுதி சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவரும் குழம்பிப்போயுள்ளனர். தமிழ் தேசியப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தாக்குப்பிடிக்கக்கூடிய நிரந்தரத் தீர்வு ஒன்றைத் தரக்கூடிய சிங்களத்தலைவர்கள் ஒருவர்கூட இந்த நாட்டில்இல்லை என்று தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற குழுத்தலைவரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், மூதூர் கிழக்குப்பிரதேசம் மற்றும் ஈச்சிலம்பற்று பகுதிகளில் வெள்ளியும்,சனியும் நடைபெற்ற கூட்டங்களில் பேசும்போது தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்திற்கு ஒன்றைத் திட்டவட்டமாக கூறிவிட்டோம். தமிழ் இனம் தனது பாரம்பரிய பூமியில் கௌரவமாக பாதுகாப்பாக வாழ்வதற்கு எதனைச் செய்யவேண்டுமோ அதனை செய்தாகிவிட்டது. நிரந்தரத்தீர்வுடன் கூடிய சமாதானத்தீர்வு காண்பதற்கு தமிழர்கள் தடையாக இன்றில்லை. எனவே தமிழர் பிரதேச அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட டோக்கியோ நிதியை தமிழர்கள் பெறுவதற்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும். சிங்களத்தலைவர்கள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரா விட்டால், தமிழர்கள் தங்கள் வழியில் செல்வதற்கு உரிமை உள்ளவர்கள். என்பதை சிங்களத் தலைவர்களுக்கு சர்வதேச சமூகம் தெளிவாகச்சொல்லவேண்டும். அந்த நிலை உருவாகியுள்ளது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் வந்த பின்னர் அரச சார்பற்ற சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவி காரணமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் சில மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை அரசாங்கம் எதுவித புனர்வாழ்வுப்பணிகளையும் வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளவில்லை. எல்லாம் பூச்சியமே.

தேர்தல் நடத்தப்பட்டால் தென்பகுதி அரசியல் குழப்பநிலை தீர்ந்துவிடும் என்று தென்பகுதி அரசியல் தலைவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால்தேர்தல்தற்போதைய குழப்பநிலையைத் தொடரவே உதவப் போகிறது என்றும் தமிழருக்கு சுயாட்சி கொடுக்கப்படவேண்டுமென்று சர்வதேச சமூகம் உணருகிறது. விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின்படி தமிழ் மக்களின் கைகளுக்கு தங்களைத்தாங்களே ஆளும்இறைமையும் அதிகாரமும் வரவேண்டும் என்ற நிலைப்பாடு வலுப்பெற்று வருகின்றது. அதனைத்தருவதற்கு எவரும் மறுக்கமுடியாத நிலைக்கு நாம் வந்துவிட்டோம் என்றும் சம்பந்தன் கூறினார். (25)

# முள்ளியவளையில் கத்திக்குத்துக்கு குடும்பஸ்தர் ஒருவர் காயம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளையில் கத்திக் குத்துக்கு குடும்பஸ்தர் ஒருவர் இலக்காகி காயமடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற சம்பவத்தில் களிக் காட்டில் வசிக்கும் விநாயகமூர்த்தி வித்தியாகரன் என்பவர் மூன்று நபர்களால் கத்தியால் குத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.காயமடைந்தவர் முல்லைத்தீவு கட்டம் 1வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.குடும்பத்தகராறு காரணமாகவே இச்சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.சம்பவம்குறித்து முள்ளியவளை காவல் பணிமனையினர் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (20)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

(கண்டாவளை)

கிளி/நாகேந்திரபுரம் நாகேந்திரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய முதல்வர் சி.நந்தகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் பி.ப. 1.45மணிக்கு ஆரம்பமானது.

இப்போட்டி நிகழ்வில் மங்கல விளக்கை கிளி/வலயக்கல்விப் பணிமனை திட்டமிடல் பணிப்பாளர் ம.பத்மநாதன், கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.சிற்றம்பலம் ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை மாவீரர் இதயாவின் தாயார் ஏற்றினார். இந் நிகழ்வில் விசுவமடு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.செழியன், கிராமசேவகர் க.நாகேந்திரம் ஆகியோரும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். இப்போட்டியில் பச்சை நிறத்தையுடைய கனோபஸ் இல்லம் 1ஆம் இடத்தையும், சிறியஸ் இல்லம் (நீலம்) 2ஆம் இடத்தையும், ஒறயன் இல்லம் (மஞ்சள்) 3ஆம் இடத்தையும் பெற்றன. இறுதியாக வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (14)

## ஓராண்டு நினைவலைகள்



### திரு.சவரிமுத்து வரப்பிரகாசம்

*7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.*

*மண்ணில் :- 04-02-1932*

*விண்ணில் :- 08-02-2003*

ஈராறு மாதங்கள் கழிந்தாலும்
ஈரமுடன் நினைவுகளில்
குடும்பத்தின் ஆணிவேராய்
நன் மக்களை உற்பவித்து
நலமுடன் வாழ வழிசெய்து
இறைவாழ்வில் ஒன்றித்த தந்தையே
என்றும் உம் நினைவுகளோடு...

மகன்மார், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

(3981)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த வருடம் ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் 166 புள்ளிகளைப்பெற்று முல்லை மாவட்டத்தில் முதல் இடத்தையும் கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்ட வற்றாப்பளை ம.வி.மாணவியும், கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் பேரின்பராசாவின் மகளுமான பேரின் பராசா – சோபியா மென்மேலும் பரீட்சைகளில் முதலிடம் பெற மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

**பணியாளர்கள்,**
**பணிப்பாளர்சபை,**
**கரைதுறைப்பற்று**
**ப.நோ.கூ.சங்கம்,**
**முல்லைத்தீவு.**

(சி.8767)


# கிராமிய அபிவிருத்தி வங்கியின் வவுனியாக் கிளை

# திறப்பு விழா

விவசாயிகளின் தோழனாக முயற்சியாளர்களின் நண்பனாக கனகராயன்குள மண்ணில் உதயமாகின்றது.

"கிராமிய அபிவிருத்தி வங்கி"

இடம் :- யாழ் சாலை, கனகராயன்குளம்
காலம்:- 09-02-2004 காலை 10.00 மணி

வாருங்கள்,எம்முடன் இணையுங்கள்
"உங்கள் நிறைவே எங்கள் நோக்கம"

**கிராமிய அபிவிருத்தி வங்கி**
**முயர்ச்சியாளர்களின் குடும்பவங்கி.**

(சி.9087)

# ம.தி.மு.க. பொதுச்செயலாளர் நேற்று விடுதலை

# சிறை வாயிலிலிருந்து தேர்தல் பிரச்சாரம் ஆரம்பம்!

## பிரதமர் வாஜ்பாயின் கருத்துக்குக் கண்டனம்

**(சென்னை)**

**ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ 18 மாதங்களின் பின்னர் சிறையிலிருந்து நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சிறை நுழைவாயிலிலேயே தனது தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிய அவர், தமிழகத்தில் பொடோ சட்டம் தவறாகப் பயன் படுத்துவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.**



அரசியலுக்கப்பாற்பட்டவர் என தான் கருதிய பிரதமர் வாஜ் பாய், அரசியல் நிர்ப்பந்தம் காரண மாக கொள்கையிலிருந்து மாறு பட்டு விலகியுள்ளதாக வருத்தம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வைகோ சிறையிலிருந்து வெளிவந்த போது ம.தி.மு.க.வினர் பட்டாசுகள் கொளுத்தியும், இனிப்பு வழங்கியும் அவரை வரவேற்றனர்.

சிறைவாசலில் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ சிறை வாசலிலிருந்தே தனது மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தைத்தொடங்கியுள்ளதாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது தனது தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய இடம் வகிக்கும் என்றும், பிரதமர் வாஜ்பாய் ஒரு நல்ல மனிதர் அதேவேளையில் கன்னியாகுமரியில் நடைபெற்ற நிகழ்வில் சனநாயகக் கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டு மக்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் எதிராக அடக்குமுறைகளைக்கையாண்டு வரும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சனநாயகத்தின் பாதுகாவலர் என்று அவர் கூறியது கேட்பதற்கு மிகவும் வருத்தமாக இருந்தது என்றும் கூறியுள்ளார்.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியுடன் சேர்ந்து மதவாதக் கட்சிகளை எதிர்க்கவுள்ளதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

தாம் சிறையிலிருந்த காலத்தில் தமக்கு பிரச்சினை எதுவும் எழவில்லை என்றும் கூறியுள்ளார்.

தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. என்பனபாரதியஜனதா தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணியில் இருந்தவரை இந்துத்துவாக் கொள்கை தலைதூக்குவதைத் தடுத்து வந்துள்ளன என்றும், இந்தக கூட்டணியிலிருந்து அவை விலகியுள்ள பின்னரும் இந்தக் கட்சிகள்இந்துத்துவா வேரூன்றுவதை குறிப்பாக தமிழகத்தில் வேரூன்றுவதை உறுதியாக தடுத்து நிறுத்தும் என்றும் கூறியதுடன்,

பொடோவைப் போல இந்துத்துவாவும் தனது தேர்தல் பிரச்சாரத்தின் முக்கிய அம்சமாக இருக்கும் என்றும், அ.தி.மு.க.வுடன் தமது பிணைப்புக்களை பாரதிய ஜனதா புதுப்பித்துக் கொண்டிருப்பதால் தமிழகத்தில் இந்துத்துவா தலைதூக்கும் அபாயம் இருப்பதாகவும், இதனை தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணி ஒடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் இந்தக் கூட்டணி முழுமையாக வெற்றி பெற தமது கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருமித்துப் பாடுபட வேண்டுமென்று தனது கட்சியினரை வைகோ கேட்டுக் கொண்டுள்ளார்.

## மார்ச் 14ல் தேர்தல் புட்டினுக்கு 70% ஆதரவு

(மொஸ்கோ)

ரஷ்ய சனாதிபதித் தேர்தல் மார்ச் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 70 சதவீத வாக்குகளை சனாதிபதி புட்டின் பெற்றுள்ளார்.

அவரை எதிர்த்து ஆறு வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும் விளாடிமர் புட்டினே ரஷ்ய சனாதிபதியாகத்தேர்ந்தெடுக்கப் படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



ரஷ்யாவில் நேற்று முன்தினம் சுரங்க ரயில் பாதையில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த ஒருவருக்கு சிகிச்சையளிக்கப்படுகின்றது.

## இரண்டு தலைகளுடன் பிறந்த குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை

### தலை வெற்றிகரமாக அகற்றல்

டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த பெண்குழந்தையின் தலைக்கு மேலாக ஒட்டியிருந்த தலையை 18 நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு வெற்றிகரமாக அகற்றியுள்ளது.

டொமினிக்கன் குடியரசான ஷான்றோ டொமினிகோவில் டிசம்பர் மாதம் பிறந்த பெண் குழந்தையின் தலையின் மேலாக சிறிய தலை ஒட்டிப் பிறந்துள்ளது.

இதனை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுவதற்கு 18ற்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்கள் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு தலையை அகற்றியுள்ளார்கள்.

விருத்தியடையாத தலை காரணமாகவே அதனை அகற்ற மருத்துவக் குழு முன்வந்துள்ளது. இந்த மேலதிக தலையினால் முதலாவது தலையிலுள்ள மூளைக்கு கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இந்த சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. நேற்று மதியம் சிகிச்சைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் குழு கூறியுள்ளது.

25 லட்சம் குழந்தைகளில் ஒரு குழந்தைக்கே இவ்வாறான இரண்டாவது தலை ஒட்டி இருப்பது தற்சமயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## ஈராக் யுத்தத்திற்கான உளவு அறிக்கைகளின் உண்மைத் தன்மையை ஆராய குழு அமைப்பு!

### தேர்தலுக்கு பின்பே முடிவை வெளியிட புஷ் பணிப்பு

ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்தத்திற்கு முன்வைக்கபட்ட உளவு அறிக்கைகள் தோல்வி அடைந்தமைக்கான காரணங்களை விசாரணை செய்வதற்காக இரண்டு அங்கத்தவர் கொண்ட ஆணைக்குழு ஒன்றை அமெரிக்க சனாதிபதி நியமித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆணைக்குழு தமது முடிவுகளை வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்னர் சமர்ப்பிக்கலாம் என்றும் சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் புஷ்ஷினால் மாத்திரமே நியமிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் சுதந்திரமாக விசாரணைகளை நடத்த முடியுமா? என்று சனநாயகக் கட்சியினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஈராக் மீது யுத்தம் தொடுப்பதற்கு காரணமாய் இருந்த உளவு அறிக்கைகள் குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு ஆரம்பத்தில் செவி மடுக்காதிருந்த ஜோர்ஜ் புஷ் குடியரசுக் கட்சி உறுப்பினர்களும் சனநாயகக் கட்சி உறுப்பினர்களும் பிரயோகித்த அழுத்தங்கள் காரணமாக இறுதியில் விசாரணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு இணங்கியுள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக வெர்ஜீனியாவின் முன்னாள் ஆளுநரும் செனகருமான சாள்ஸ்வெட் என்ற புலனாய்வுத்துறை உறுப்பினரையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் லோறன்ஸ் விமில்டன் என்ற குடியரசுக் கட்சி உறுப்பினரையும் நியமித்துள்ளார்.

## ஆய்வுக் கலங்களின் பணியில் விஞ்ஞானிகள் திருப்தி

செவ்வாய்க்கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ள இரண்டு விண்வெளி ஆய்வு ஓடங்களும் சிறப்பான முறையில் இயங்கி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள ஆய்வுக் கலங்கள் கட்டளை மையத்தின்கட்டளைகளை ஒழுங்கான முறையில் செய்து வருவதாகவும் இதில் ஒரு கலத்திற்கு நான்கு மீற்றர்கள் நகருமாறு கொடுக்கப்பட்ட கட்டளைக்கமைய அது சென்றவேளை, செவ்வாயில் உள்ள தூசிப் பகுதியில் அதன் சக்கரம் புதையுண்டதால் அது மூன்றரை மீற்றர் தூரத்தைத் தாண்டியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.



பாக்தாத்துக்கு அருகிலுள்ள மொசுல் நகரில் தேடுதல் நடத்திய அமெரிக்கக் கூட்டுப் படையினர் கவச வாகனத்தினருகில் நிலை எடுத்து நிற்கின்றனர்.



ஈராக்கின் கர்பலா நகரில் வெள்ளியன்று நடைபெற்ற தொழுகை வழிபாட்டில் கலந்து கொள்ளும் ஷியா முஸ்லிம்கள்.

## மும்பாய் குண்டுவெடிப்புடன் தொடர்புடைய சந்தேக நபரை ஒப்படைக்க நடவடிக்கை

இந்தியாவின் மும்பாயில் முன்நூறு பேருக்கும் மேற்பட்டோரின் உயிர்களைக் காவு கொண்ட குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் அபுசாலிம்மை இந்தியாவிடம் கையளிக்குமாறு போர்த்துக்கல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இவர் போலிக்கடவுச் சீட்டு ஒன்றைப்பயன்படுத்தி போர்த்துக்கலுக்குள் நுழையும் போது போர்த்துக்கல் குடிவரவு குடியகல்வு பிரிவினரால் கடந்த இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இந்திய புலனாய்வுத்துறையினரால் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த இச்சந்தேக நபரை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இவரை போர்த்துக்கல் அரசு இந்தியாவிடம் கையளிக்கவுள்ளது.

இவர் போர்த்துக்கலுக்குள் போலிக் கடவுச்சீட்டுடன் சட்ட விரோதமாக புக முயன்ற குற்றத்திற்காகவும், அதிகாரிகளின் கடமையினைசெய்வதற்கு குந்தகத்தினை ஏற்படுத்தியமை தொடர்பாக இவர் தற்போது போர்த்துக்கலில் தண்டனை அனுபவித்து வருகின்றார். இவரின் தண்டனைக் காலம் முடிவடைந்த பின்னரே இவர் இந்தியாவிற்கு நாடுகடத்தப்படுவார் என செய்திகள் தெரிவிக்கின்றன.


# அடக்குமுறைகளுக்கு அச்சுறுத்தலாகும் வைகோவின் விடுதலை

அ.கலைவாணி

தமிழகத்தை மட்டுமன்றி இந்தியா முழுவதுமே பொடோ சட்டம் ஆக்கிரமித்த காலம் மலையேறி விட்டது என்று கூறும்படியாக சம்பவங்கள் நாளுக்குநாள் அரங்கேறி வருகின்றன.

முக்கியமாக தமிழகத்தில் பொடோ சட்டம் என்றால் விழி பிதுங்கிய நிலை இன்று பொடோ சட்டமா அது வெறும் பூச்சட்டம் எனும் நிலைகளையே தற்போது தோற்றுவித்திருக்கின்றது.

அந்தவகையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தீவிரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்தியிருக்க வேண்டிய பொடோ சட்டத்தை அரசியல் இலாபத்திற்குப் பயன் படுத்தியதால் தான் தமிழகத்தில் பொடோ சட்டம் பிசுபிசுத்துப் போயிருக்கின்றது. என்றே நம்பத் தோன்றுகின்றது.



அந்த வகையில் ஒன்றரை வருடகாலத்தின பின்னர் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பிணையில் வெளிவந்திருக்கின்றார்.

இதுவரை தமிழகத்தில் 'ஏன்.....என்றால் சிறைவாசம் இம் என்றால் வனவாசம்' எனும் நிலைமைகளே காணப்பட்டன. எழுத்து சுதந் திரம், பேச்சு சுதந்திரம் எதுவுமே இல்லாதது போலவே பத்திரிகையாளர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை பொடோ சட்டம் மூலம் தான் கட்டிவைக்கப்பட்டார்கள்.

கூட்டணியை வலுப்படுத்தவும், கூட்டணி தாவலை நிறுத்தவுமே மத்தியரசு உயர் நீதி மன்றத்திற்கு அதிக அதிகாரங்களை வழங் கியது என்பது வெளிப்படை.

ஆனால் கூட்டணி வலுப்படுவதற்குப் பதி லாக உடைந்துபோய் உள்ளது. ஆனால் மத்தியரசின் உயர் நீதிமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் வழங்கியமை என்பது பொடோ சட்டத்தில் அகப்பட்டிருந் தவர்களுக்கு அரிய வாய்ப்பைத் தேடிக்கொடுத்து விட்டது.

பொடோ சட்டத்தில் இருந்து ஒருவர்பின் ஒருவராக உயர் நீதிமன்றம் மூலம் பிணையில் வெளிவந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில்தான் வைகோவும் பிணையில் வெளிவந்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியது குற்றமென்று வைகோவும் 8 பேரும் 2001 யூலையில் கைது செய்யப்பட்டார்கள்.

552 நாட்களின் பின்னர் வைகோ நீங்கலாக ம.தி.மு.க. வினர் கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். இது பேச்சு சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு என்பதைக் காட்டியது எனலாம்.

அதேபோல் வைகோவும் பிணை கோரி பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். ஆனால். பொடோ நீதிமன்றம் கடுமையான நிபந்தனைகளை விதித்தது.

ஐம்பது ஆயிரம் ரூபா சொந்தப் பிணையுடன் ஐம்பது ஆயிரம்ரூபா இரு நபர் பிணையும் வைகோ வழங்க வேண்டும். அதாவது வைகோ சிறையில் இருந்து பிணையில் வெளி வருவதற்குப் பிணை வைக்க வேண்டும்.

பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கக் கூடாது. பொடோ வழக்குப் பற்றியும் பேசக் கூடாது, சென்னை நகரை விட்டு வெளியேறக் கூடாது, கடவுச் சீட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். என்பவை உள்ளிட்ட 13 நிபந்தனைகளை பொடோ பூந்தமல்லி நீதிமன்றம் விதித்திருந்தது.

வைகோ பிணையில் வெளிவந்தாலும் அவர் சிறையில் அடைக்கப் படுவதற்குச் சமனாக இருந்தது பூந்தமல்லி பொடோ நீதிமன்றத்தின் நிபந்தனைகள்.

அது மட்டுமன்றி பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அவர் தமிழகத்தில் எந்தத் தொகுதியிலும் போட்டியிடுவதுகூட இந்த நிபந்தனைகள் மூலம் தடை செய்யப்படு வதாகவே இருந்தது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைப பொறுத்தவரை வைகோ தனக்கு மிகுந்த நெருக்கடிகளை உருவாக்கி விடுவார் எனவும் அச்சம் உண்டு. அதனால்தான் வைகோவை பொடோவில் உள்ளே தள்ளினார். அவர் பிணையில் வெளியே வருவதை விரும்பாது தான் பல முட்டுக்கட்டைகளைப் போட்டார் என்பதும் தெரியாத விடயங்களல்ல.

ஆனால் வைகோவோ ஒருபடி மேலே சென்று சென்னை உச்ச நீதிமன்றத்தை நாடிவிட்டார்.

இந்த வகையில் தான் பூந்தமல்லி பொடோ நீதிமன்ற நிபந்தனைகளை தளர்த்த சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணைக்கு இடையூறு ஏற்படாத வகையில் வைகோ வெளியே செல்லலாம். அவ்வாறு செல்லும் போது வழக்கு விசாரணை அதிகாரியிடம் எங்கே போகின்றார் என்பதை மட்டும் முறைப்படி தெரிவித்தால் போதுமானது. விடுமுறை நாட்களில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தேவை யில்லை. பத்திரிகையாளர்களை சந்திக்கத் தடையில்லை. பிணை நிபந்தனைகளை ஏற்று நடப்பதாக உறுதியளிக்கத் தேவையில்லை என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பு ம.தி.மு.க. வினருக்கு சந்தோசத்தைக் கொடுக்கும் அதேவேளை தமிழக முதலமைச்சருக்கு கசப்பாகவே இருக்கப் போகின்றது என்பது உண்மை.

பிரதமர் கனவு கலைந்து போயிருக்கும் ஜெயலலிதா தமிழக முதலமைச்சர் பதவியும் வைகோவின் திறமையான பேச்சாற்றல் மூலம் கருணாநிதிக்கோ அல்லது மகன் ஸ்டாலினுக்கோ பறிபோகலாம் என்றும் அச்சம் கொள்ள முடியும்.



பிரதமர் கனவு கலைந்துபோயுள்ள ஜெயலலிதா

ஏனெனில் ஜெயலலிதா அரசு தன்னை ஒடுக்குவதற்கு எப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்தார் என்பது பற்றி பிரதமர் வாஜ்பாயிற்கு வைகோ பட்டியலிட்டுள்ளார்.

தன்னை சிறையில் தள்ளியதுடன் நின்று விடாது. தனது எம்.பி பதவியையும் பறிக்கத் திட்டமிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவர் அறுபது நாட்கள் தொடர்ச்சியாக சபைக்கு வராதுவிட்டால் அது பற்றி சபாநாயகருக்கு விடுப்புக் கடிதம் அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பாதுவிட்டால் அவரது எம்.பி பதவி இல்லாது போகும். அந்த வகையில் சபாநாயகருக்கு எழுதிய விடுப்பு கடிதங்கள் இரண்டு டெல்லிக்கு போய்ச் சேராமல் தடுக்கப்பட்டுள்ளது என்றும், பொடோ சட்டம் தொடர்பான மக்களவை விவாதத்தில் கலந்து கொள்ள முடியாது தடைசெய்யப்பட்டது வரை அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தன்னை இவ்வாறு அடக்கியாள முயலும் அ.தி.மு.க.வுக்கு பாடம் கற்பிப்ப தற்காகவே வாஜ்பாயின் தேசிய சனநாயகக் கூட்டணியிலிருந்து விலகியுள்ளதாகவும் வைகோ கூறியுள்ளார்.

எனவே ஜெயலலிதாவுக்கு பாரதூரமான நெருக்கடிகளை வைகோ பிணையில் வெளியே வந்திருப்பதால் ஆரம்பிக்கலாம் என்றும் எதிர்பார்க்க முடியும்.

அதேநேரம் பாராளுமன்றத்திலும்சரி வெளிமேடைகளிலும்சரி பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக மூச்சுக்குமூச்சு பேசியதோடு, உச்சக்கட்ட விசுவாசத்தோடு இருந்த என்னை இப்படி பாரதிய ஜனதா கைகழுவி விட்டது என்று வைகோ பொருமுவதாகக் கூறும் ம.தி.மு.க.வினர் எந்த வாயால் பாரதிய ஜனதாவுக்கு பரிவட்டம் கட்டினாரோ, அதே வாயால் அந்தக் கட்சியைப் போட்டு வைகோ கிழிக்க வேண்டும் என்றும் கூறி வருகின் றார்கள்.

இந்நிலையில் வடக்கில் உங்கள் ஆங்கில புலமை பிரமாதமாக எடுபடும் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் வடக்கு பிரச்சாரத்திற்கு தனித் திகதிகள் ஒதுக்கி கொடுக்க வேண்டும் என்றும் வைகோவிடம் தி.மு.க. கேட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

அதனால் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வடக்கில் வைகோ புயல் வீசப்போகின்றது என்றும் நம்பலாம்.

அதேநேரம் வியாழக்கிழமை கருணாநிதி பொடோ நீதிமன்றத்திற்குச் சென்று வை.கோ.வைச் சந்தித்துள்ளார். இந்த சந்திப்பு மிகவும் முக்கியம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் சிறைக்குள்ளிருக்கும் போதே தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைக் கிண்டல் செய்த வைகோ.பிணையில் வெளிவந்தவுடன் சும்மா இருப்பாரா...... தேர்தல் பிரச்சாரத்தில் ஜெயலலிதாவை தான் போட்டு சக்கைபிழியப் போகின்றார் என்பதை நேற்றுமுன்தினம் செய்தியாளர் களிடையே அவர் கூறியவை சான்றுபகரும்.

ஏனெனில் வைகோ திறமையான பேச்சாளர்.நேர்மையான அரசியல்வாதி. ஊழல், மோசடி என எதுவித சிக்கல்களும் இல்லாத வர். இவ்வாறான தனித்துவமான ஆற்றல்கள் கொண்டதால் மக்களிடையே தனித்து வமானவராகத் திகழ்கின்றார்.

இதனால் தமிழக முதலமைச்சருக்கும்சரி, பிரதமர் வாஜ்பாய் அரசுக்கும் சரி வைகோ நெருக்கடிகளை உருவாக்குவார் என்பது உறுதியாக எதிர்பார்க்க முடியும்.

கூட்டணியை வலுப்படுத்தவே மத்தியரசு உயர்நீதிமன்றத்திற்கு அதிக அதிகாரங்களை வழங்கியிருந்தது. ஆனால் கூட்டணிகள் விலகிப் போனதுடன், மத்தியரசை விமர்சிக் கவும் தயாராகி வருகின்றமை என்பதே வாஜ்பாய் அரசுக்கு சங்கடமான நிலையாகும்.

□□□

## போதைக்கு அடிமையானோருக்கு மறுவாழ்வளிக்க மன்னாரில் மனிதநேய அமைப்புக்கள் நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு உடல் உள அறிவினை வழங்க மனித நேய அமைப்புக்கள் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன.

மன்னாரில் வள்ளிபுனம், சாந்திபுரம் போன்ற கிராமங்களே போதைப் பொருள் பாவனைக்கு கூடுதலாக அடிமையான கிராமங்களாகும்.

இவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த அமைப்புக்கள் கருத்தரங்குகள் மூலம் அறிவினைப் புகட்டி அவற்றில் இருந்து மீள்வதற்கு வழிவகைளை செய்து வருகின்றன. (ம்)

## இடம்பெயர் விஞ்ஞான ஆய்வுகூட சேவை

மாகாண கல்வி அமைச்சு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையுடன் இணைந்து விஞ்ஞான ஆய்வுகூட இடம் பெயர் சேவையினை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 9ஆம், 10ஆம் நாட்களில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இது நடைபெறவுள்ளது. இச்சேவை விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது. (05)

## தபால் ஊழியர்களுக்கு விசேட கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

தபால் ஊழியர்களுக்கான கலந் துரையாடல் முல்லைத்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில் கடந்த 4-ம் திகதி முல்லை மாவட்ட தபால் அதிபர் தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ நிர்வாக சேவை முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் இசையமுதன், தமிழீழ நிர்வாக சேவையின் நடுவப்பணியக நிர்வாகப் பொறுப்பாளர் கானகன், தமிழீழ நிர்வாக சேவை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர், தந்தி. முல்லை. மாவட்ட நிர்வாக அலுவலர், பா.சு. பொன்னுச்சாமி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினார்கள். இதில் தபால் விநியோகம் செய்வதில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

மேலும் முல்லை மாவட்டத்திலுள்ள உபஅஞ்சல் அலுவலகத்திற்கான கட்டடங்கள் சேதமடைந்த நிலையில் உள்ளதாகவும் அதைப் புனரமைப்பதற்கு நிதி உதவி இல்லையெனவும், தபால் விநியோகம் செய்வதற்குப் பணியாளர் பற்றாக்குறை நிலவுவதாகவும், அதற்கு ஏதாவது வழி செய்யுமாறும் அஞ்சல் ஊழியர்கள் தெரிவித்தனர். (20)

# சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க புலிகள் பேரார்வம் கொண்டுள்ளனர்

## -சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அறிக்கை

சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் வெற்றிகரமாக முன்னெடுப்பதில் விடுதலைப்புலிகள் பேரார்வம் காட்டி வருகின்றார்கள். சமாதான முயற்சிகள் தொடர வேண்டும் என்பதிலும் அவர்கள் பற்றுதியுடன் செயற்படுகின்றார்கள் என்று சுவிஸ்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

விடுதலைப்புலிகளின் இந்த நிலைப்பாட்டைத் தாம் மனப்பூர்வமாக வரவேற்பதாகவும் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கு சிறுபான்மை மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்படுகின்றார்கள் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் பகுதியில் கடந்த 5ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இராமநாதன் முன்பள்ளியின் வளாகத்தில் கப்டன் ஆரூரன் நினைவாக அவரது சகோதரியினால் பழமரக்கன்று நாட்டி வைப்பதை படத்தில் காணலாம். (படம்: சோதி)

# வைத்தியசாலையில் நிதி மோசடி

கண்டி பேராதனை வைத்தியசாலையில் 80 ஆயிரம் ரூபா நிதி மோசடி இடம் பெற்றிருப்பதாக வைத்தியசாலையின் கணக்காளர் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறையீடு செய்துள்ளார்.

வைத்தியசாலையின் நிதி பிரிவில் வைக்கப்பட்டிருந்த பணத்தில் 80 ஆயிரம் ரூபா குறைவாக காணப்பட்டது தொடர்பான விபரம் சில தினங்களுக்கு முன்னரேயே தெரிய வந்துள்ளதாக கணக்காளர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து பேராதனைப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# ஆயுத முனையில் கொள்ளையடித்தோர் வர்த்தகரையும் ஆற்றில் வீசினர்

## இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 20 லட்சம் பெறுமதியான இரத்தின கற்களையும், அவரின் காரையும் கொள்ளை அடித்த குழுவொன்று அவரை கீத்தர கங்கையில் எறிந்து விட்டு சென்றுள்ளது.

இக்கொள்ளையர்கள் அதிகாலை நான்கு மணி அளவில் ரி- 56 ரக துப்பாக்கியுடன் வந்து இக்கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக இரத்தினபுரி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# உட்கட்சி முரண்பாட்டால் அமைச்சர் அலுவிகார மாவட்டத்தலைமைப் பொறுப்பிலிருந்து விலகல்

## அமளிதுமளியில் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

**ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளையடுத்து சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தனது மாவட்டத் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்.**

சுமார் 50 வருட காலமாக அரசியலில் பிரவேசித்து பாடுபட்டு உருவாக்கிய கட்சி அதன் உறுப்பினர்களாலேயே அழிவடைவதாகக் கூறி உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாணசபை அலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார தமது மாத்தளை மாவட்டத் தலைமைப் பொறுப்பிலிருந்து நீங்குவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் தனது தொகுதியான மாத்தளையில் நடைபெற்ற மாவட்ட அதிகார சபைக் கூட்டமொன்றில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

அக்கூட்டத்தின்போது மாத்தளைப் பிரதேச சபை உறுப்பினரான எல்ஹேன் எழுந்து நின்று ஐ.தே. கட்சி தனிப்பட்ட எவரினதும் சொத்து இல்லை எனவும், சில குடும்பத்தவருக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல எனவும் கூறியதுடன் பொதுமக்களின் வாக்குகளினால் ஆட்சிபீடம் ஏறிய அமைச்சர்களை சந்திக்கச் செல்லும் பொதுமக்கள் பேசித் துரத்தி விடப்படுவதால், கீழ்மட்ட உறுப்பினர்கள் மக்களிடம் செல்ல முடியாதுள்ளதாகக் கூறினார். இதனால், ஆத்திரமுற்ற அலிக் அலுவிகார மேற்படி பதவியைவிட்டு நீங்குவதாகக் கூறியுள்ளார். இதனால் ஏற்பட்ட அமளிதுமளியால் மேற்படி கூட்டத்தை ஒத்தி வைப்பதாக மாவட்ட எம்.பி. கவிரத்ன அறிவித்தார்.

# நல்லின கால்நடை விருத்திக்காக கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம்

கால்நடைகளின் நல்லின விருத்தியை மேம்படுத்துவதற்காக வளர்ச்சி குன்றி காணப்படும் உள்ளூர் இனங்களில் உள்ள காளை, கடா என்பனவற்றுக்கு ஆண்மை நீக்கம் சேவை நடை பெறுகின்றது.

கடந்த 04.02.04 அன்று இதன் முதல் கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வெட்டிதிடல், புளியம்பொக்கணை பகுதியில் காராளி செயற்கை முறைசினைப்படுத்தல் சேவை நிலையத்தின் பிரத்தியேக தொழில் நுட்பவியலாளர்கள் கு.நவீஸ்வரன், வி.கிருபானந்தன் ஆகியோரால் 50ற்கும் மேற்பட்ட காளைகளுக்கு ஆண்மைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதில் ஆர்வம் உடைய கால்நடை பண்ணையாளர்கள் தங்கள் காளை,கடாக்களுக்கு ஆண்மை நீக்கம் செய்து கொள்ளலாம் என காராளி செயற்கை முறை சினைப்படுத்தும் நிலைய முகாமையாளர்தெரிவித்துள்ளார்.(05)

# மிதிவெடி விழிப்புணர்வு செயற்பாடுகளில் வெண்புறா குடாநாட்டில் தீவிர பணி

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி விழிப்புணர்வு செயற்பாடுகளில் வெண்புறா நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

மிதிவெடி அபாயமுள்ள பிரதேசங்களை அண்டியுள்ள பகுதிகளில் வசிப்போரிடத்தே மிதிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளே அதிக பயனுள்ளது என்பதை கருத்திற் கொண்டு இந்நிறுவனம் இவ்வாறன பிரதேசங்களில் வாழும் மக்களிடையே விழிப்புணர்வு செயற்பாடுகளை நடத்திவருகின்றனர்.

அத்துடன் பாடசாலை மாணவர்களிடத்தேயும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் போட்டிகளையும் நடத்தி வருகின்றனர்.

அத்துடன் பாடசாலைச் சிறார்களுக்கும் மிதிவெடி அபாயம் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களையும் வழங்கி வருகின்றனர். இதனால் பல்லாயிரக்கணக்கானோர் பலன் பெற்றுள்ளனர். (33)

# சனாதிபதி-சந்திரிகாவின் பணிப்பில் 2000 கைதிகள் விடுவிப்பு

இலங்கையில் 56வது தேசிய சுதந்திரதினத்தை முன்னிட்டு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் பொது மன்னிப்பின் கீழ் 2000 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் சட்டத்தின் 34வது பிரிவின்படி சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத் தின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை உட்பட நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலிருந்து இந்தக் கைதிகள் விடுதலை பெற்றுச் சென்றுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து மட்டும் 700 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2004ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி விடுதலை பெற்றுச் செல்ல இருந்தவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர், அத்துடன் தண்டப்பணம் செலுத்த முடியாது சிறைவாசம் அனுபவிப்பவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இருப்பினும் ஊழல், வீடு உடைத்தல், அரச விரோத செயல்களில் ஈடுபடுதல், கடத்தல்களில் ஈடுபடுதல், போதைப்பொருள் வியாபாரம், பாலியல் வல்லுறவு போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களுக்கு இந்த விடுதலை செல்லுபடியாகாது.

# இந்தியாவிலிருந்து தாயகம் திரும்புவோர் பிரச்சினைகளைத் தீர்க்க இலவச ஆலோசனை

(மன்னார்)

மன்னாரில் இருந்து அகதிகளாக இந்தியாவிற்கு சென்று மீண்டும் தமது தாயகத்திற்கு வந்து குடியேறும மக்கள் மன்னாரில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக தாங்கள் முன்னர் மன்னாரில் வசித்து வந்த காணிகளில் எல்லைப் பிரச்சினைகள் என்பனவற்றை இவர்கள் சந்தித்து வருகின்றனர்.

எனவே, இம்மக்களின் நன்மை கருதி யூ. என்.எச்.சி.ஆர். மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பன இவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கி பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றன.

இப்பணியில் மன்னார் மாவட்ட மனிதநேய அமைப்பின் இணைப்பாளர் பீற்றர் ஈடுபட்டு வருகின்றார். (மி)

# வைத்தியர் இன்மையால் நோயாளர் அவலம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இயங்கிவரும் முல்லை மாவட்டம் கட்டம் I வைத்தியசாலையில் அண்மை நாட்களாக வைத்தியர் சரியான முறையில் வராத காரணத்தால் மக்கள் சென்று காத்திருந்து திரும்பும் அவலநிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக வைத்திய சேவை நடைபெற்ற போதும் தற்போது இவ்வாறு சேவைகள் சீர்குலைந்துள்ளதால் மக்கள் பலத்த இடர்பாடுகளை சந்திப்பதைநேரில் காண முடிகின்றது.(20)

# ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினால் யுத்தகாலத்திலும் கல்வித்தரம் பாதுகாப்பு

## - மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்வி வளர்ச்சி நடவடிக்கைகளில் பின்னடைவுகள் காணப்பட்டாலும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையினால்யுத்த காலத்தில் கூட கல்வித்தரம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது என மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார். சர்வதேச கல்வியக ஆலோசகர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தகாலத்தில் மக்கள் இடம் பெயர்ந்து சென்றபோது பாடசாலைகளும் இடம் பெயர்ந்து சென்றன. மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்த போது முதலில் பாடசாலைகளை மீண்டும் திறப்பதில் அவர்கள் அக்கறை காட்டினார்கள். கிளிநொச்சி, வவுனியா வடக்கு போன்ற பிரதேசங்களில் ஆசிரியர்கள் சம்பளம் கிடைக்காத நிலையிலும் தமது பணிகளை அர்ப்பணிப்புடன் செய்தார்கள். பேரழிவின் மத்திலும் கல்வி உணர்வுமிகுந்தவர்களாக மக்கள் செயற்பட்டு வந்துள்ளார்கள் என்று செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேசக் கல்வியகத்தின் ஆலோசகர்களான டேசிஸ்டிசில்வா, ஐ.ராஜகுரு ஆகிய இருவரும் சர்வதேச கல்வியகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஜோன்தொம்சன் பயிற்சித்திட்டத்தின் கீழ் ஆசிரிய தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை மதிப்பீடு செய்யும் பணியின் ஓர் அங்கமாக இலங்கை வந்துள்ளனர். நேபாளம், மேற்குவங்காளம், சென்னை ஆகிய இடங்களுக்குச் சென்ற இருவரும் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு மங்கோலியா நாட்டுக்குச் செல்லவுள்ளனர்.

சர்வதேசக் கல்வியகம், உலகில் உள்ள ஆசிரியர் தொழிற்சங்கங்களை உறுப்பினர்களாக உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். இலங்கையைச் சேர்ந்த ஐந்து ஆசிரிய தொழிற்சங்கங்கள் சர்வதேசக் கல்வியகத்தில் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் ஒன்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

இக்கலந்துரையாடலின்போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரமுகர் திருமதி யோகேஸ்வரன் தொழிற் சங்கத்தில் பெண் உறுப்பினர்களின் பங்களிப்புப் பற்றி விளக்கினார். (25)

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் வவுனியா கிளை நாளை திறப்பு

(ஒட்டுசுட்டான்)

கிராமிய அபிவிருத்தி வங்கியின் வவுனியா கிளை திறந்து வைக்கப்படவுள்ளது. நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கனகராயன்குளம் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மல்லாவி, மன்னார் ஆகிய இடங்களில் இதன் கிளைகள் இயங்கிவருகின்றன என வவுனியாகிளை மேலாளர் தெரிவித்துள்ளார். கிளை திறந்து வைக் கப்பட்ட தினத்திலேயே மக்கள் வாடிக்கையாளராக இணையலாம் என அவர் கூறினார். (05)

# பணிநிலை வெற்றிடம்

## ஆயப்பகுதி

**ஆயப் பகுதியில் கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன**

### 01. அலுவலர் (ஆண்கள்)

தகைமைகள்:
க.பொ.த (உயர்தர) இல் பொருத்தமான பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

### 02. ஆய உதவியாளர் (ஆண்கள்)

தகைமைகள்:
க.பொ.த (சாதாரண) இல் தமிழ்,கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

### 03. அலுவலக உதவியாளர் (ஆண்கள்)

தகைமைகள்:
ஆண்டு 10 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

### 04. பாதுகாவலர்

தகைமைகள்:
ஆண்டு 9 தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

உடல் வலுவும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படும்
- ஊழியர் நயநிதி வசதி உண்டு

**நேர்முகத்தேர்வு**

இடம்:
ஆயப்பகுதி,
நடுவப்பணியகம்,
கிளிநொச்சி

காலம்:
2004.02.10ஆம்,11 ஆம் நாள்
காலை 11 மணி

பொருத்தமான வேண்டுகையாளர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தன்வரலாறு (சுயவிபரம்), சான்றிதழ்களுடன் சமூகம் தரவும்.

ஆயப்பகுதி, நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்

02.02.2004 (சி-9084)

---

**பூநகரி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் வாடியடி, பூநகரி.**

# கட்டட மேற்பார்வையாளருக்கான விண்ணப்பம் கோரல்

எம்மால் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டட வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக கீழ்வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-**

அ) க.பொ.த. சா/தரப் பரீட்சையில் தமிழ்,கணிதம்,விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட உரிய தொழில் நுட்பக்கல்லூரியில் தொழில்நுட்பவியலாளர் தேசிய தராதரப்பத்திரம்(குடிசார் எந்திரவியல்) சித்தியும்(என்.சீ.ரீ) ஐந்து வருடங்கள் துறைசார்ந்த பகுதியில் சேவையாற்றிய வராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் தொழில் நுட்பவியலாளருக்கான டிப்ளோமா (என்.டி.ரி) பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

இ) கட்டட மேற்பார்வையாளராக 3 வருடம் பணிபுரிந்த அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**வயது:-** வயது எல்லை கணிக்கப்படமாட்டாது.

**முடிவுத்திகதி:-** 15. 02. 2004.

மேற்படி தகைமையுடையவர்கள் விண்ணப்பத்தினை, பொதுமுகாமையாளர், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக கொள்ளப்படமாட்டாது.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
திரு.கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்.

(சி.9085)

---

# வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம் Vanni Institute of Technology

அமெரிக்கா சிலிக்கன் வலியில் தலைமைச்செயலகத்தைக் கொண்ட அரசசார்பற்ற சர்வதேச நிறுவகமான **International Tamil Technical professionals' Organization-ITTPO** வடகிழக்கில் வாழும் மக்களுக்காக **VanniTech** என்ற பெயரில் உயர் தொழில்நுட்ப நிறுவகத்தை கடந்த ஆண்டு கிளிநொச்சியில் நிர்மாணித்து அதன் முதலாவது தொகுதி மாணவர்களுக்கு தற்போது உயர் தொழில் நுட்ப வகுப்புகளை நடாத்திவருகிறது. இந் நிறுவகம் இரண்டாவது தொகுதி மாணவர்களை இவ்வருடம் உள்வாங்கவுள்ளது.

பின்வரும் 01 வருடக் கற்கை நெறிகள் (Study Programs) இங்கு வழங்கப்படவுள்ளன.

1. **Database Application Development**
2. **Web Based Application Developement**
3. **Computer networking and Communications**
4. **Electronics**

தூர இடத்தில் இருந்துவரும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளைக்கொண்ட வளாகமாக இது உள்ளது. போதனைகள் யாவும் ஆங்கிலத்தில் நடாத்தப்படும். தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு நிறுவகம் தொழில் வாய்ப்பை ஒழுங்குபடுத்துமேயானால் அவர்கள் அதனை ஏற்று 02 வருடங்கள் வட-கிழக்கில் வேலை செய்யும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தகமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக பட்டதாரி

அல்லது

2. க.பொ.த (உ/த) இல் மூன்று பாடங்களில் சித்தியும், க.பொ.த (சா/த)இல் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகியபாடங்களில் சிறப்புச் சித்திகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் நுழைவுப்பரீட்சையிலும், நேர்முகப்பரீட்சையிலும் தோற்ற வேண்டும். இக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்வதற்கான (01வருடம்) கட்டணமாக ரூபா 10,000 அறவிடப்படும் (பகுதிக்கட்டணமாகவும் செலுத்தலாம்) சில தகுதிபெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும், கடனுதவிகளும் வழங்கப்படும். இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து பெப்ரவரி 15th திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முகவரி:

**Registrar**
**Office of Admission**
**Vanni Institute of Technology**
**Kilinochchi**

## VanniTech Student Admission Application Form – 2004

1. Name :.................................. 2. Father's/Husband's Name:..............................
3. Mailing Address :.................. 4. Permanent Address:...................................
5. Date of Birth : ................... 6. Gender :....... 7. Preferred Study Program:...........
8. Academic Qualifications :

*Provide photo-copies of all certificates and related documents. For university study, list subjects (including Lab work), grades, and honors for each year.*

| Examinations/ Programs | Name of Institution | Name of Degree / Certification | Start / End Dates | Subjects | Grades |
|---|---|---|---|---|---|
| University *(Program of study)* | | | | | |
| All other Programs *(List individually)* | | | | | |
| G.C.E. A/L | | | | | |
| G.C.E. O/L | | | | | |

9. Work Experience *( List all experiences related to Business, Industrial, and Teaching )*

| Position at Employment | Responsibilities & Accomplishments | Name of Institution | Start / End Dates |
|---|---|---|---|
| | | | |
| | | | |

**10.Other Skills**
***( Describe in detail all activities relating to Management, Leadership, Public-Service, School-Prefect, Team captain, other Technical expertise etc.)***

**11. To the best of my knowledge all information provided above are truthful, and any misrepresentation of information or furnishing of false documents will disqualify my opportunity to be selected as a student. If it is discovered during my studies that I have willfully provided incorrect information, I will be expelled from institute, and if discovered after my studies, my certification will be revoked.**

Signature :.................................. Date :..........................

www.vanni.org
www.ittpo.org
info@vanni.org

VanniTech
Vanni Institute of Technology

(சி-9022) *ITTPO is a registered non-profit organization in the USA and a government approved NGO in Sri Lanka*



## சிந்தனைக்கு

இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன; வரலாறு எனது வழிகாட்டி.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 08-02-2004


## ஆப்பிழுத்த குரங்காக...!

பாராளுமன்றத் தேர்தல் குறித்து சனாதிபதி சந்திரிகா பெரும் குழப்பத்தில் உள்ளார். அவரின் அண்மைய அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் ஒன்றிற்கொன்று முரணானவையாகவும், குழப்பமானவையாகவும் இருப்பதில் இருந்தே இதனைப் புரிந்துகொள்ளமுடியும். ஒருவகையில் பார்த்தால் அவரின் தற்போதைய நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலையை ஒத்ததாகவே உள்ளதெனலாம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் – ஜே.வி.பி. க்கும் இடையிலான கூட்டானது பொதுத் தேர்தல் ஒன்றை மையமாகக் கொண்டது என்பது வெளிப்படையானது. அதாவது கூட்டணி ஏற்பட்டதும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும் என்பது கூட்டணிக்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டவர்களின் விருப்பாகும்.

சனாதிபதி சந்திரிகா இக் கூட்டணி குறித்து வெளிப்படுத்தும் சமிக்கைகள் முற்றிலுமாக இக் கூட்டணி விடயத்தில் தனக்கு ஒத்திசைவு/ இணக்கப்பாடு இல்லை என்பது போன்றே உள்ளது. ஆனால் இதில் எவரும்நம்பிக்கை கொள்ளவில்லை. அதாவது சனாதிபதி சந்திரிகா பூரண விருப்பின்றி இக் கூட்டணிக்கு உடன்பட்டார் என எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சனாதிபதி சந்திரிகா அரசியல் நோக்கங்களின் அடிப்படையிலேயே இக் கூட்டணி விடயத்தில் தான் பெரும் பாலும் வெளியில் இருப்பது போன்று காட்டிக்கொள்ள விரும்புகின்றார். ஆனால் இதில் பெரிதாகப் பயன் எதுவும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில் இதனை எவருமே நம்புவதற்குத் தயாராக இல்லை.

ஆனால், ஒன்று இக் கூட்டணியின் பின்னர் சனாதிபதி சந்திரிகாவிற்கு முன்பிருந்ததை விட குழப்பங்கள் அதிகரித்துள்ளன எனின் மிகையில்லை. அதாவது தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானங்களை மேற்கொள்வதா அன்றி கூட்டணியின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதா என்பதே அவரின் குழப்பமாகும்.

சனாதிபதி சந்திரிகாவின் இவ்வருட சுதந்திரதின உரை அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டதொன்றாகவே இருந்தது. ஏனெனில் ஜே.வி.பி.– சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைத்துக்கொண்டதன் பின்னரான முக்கிய உரையாக இது இருந்தது. ஆனபடியால், சனாதிபதி சந்திரிகா தேர்தல் குறித்து சாதகமாக எதனையும் அறிவிக்கலாம் என்ற எதிர்பார்க்கை பரவ கவே இருந்தது. ஆனால், சனாதிபதி சந்திரிகா அனைவருக்கும் ஏமாற்றம் அளிக்கும் வகையில், அவ்விவகாரத்தை முற்றாகவே புறம் தள்ளியிருந்தார்.

அதுமட்டுமல்ல, பலரின் எதிர்பார்க்கைக்கு மாறாகவும் அவர் சிலசமயங்களில் பேசியுள்ளார். சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் பேசிய அவர், தேர்தலுக்கான நிதி சுதந்திரக்கட்சியிடம் இல்லை. ஆகையினால், தேர்தல் நடாத்துவதற்கு இரண்டு மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், கொழும்பிலிருந்து வெளியாகும் தகவல் ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள் பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெறலாம் எனத் தெரிவிக்கின்றன. இவ் ஊடகங்கள் பாராளுமன்றம் கலைக்கப்படுவதான திகதியையும், அதற்கான காரணங்களையும் கூடக் கற்பிப்பவையாக உள்ளன. இவற்றை உறுதிப்படுத்துமாப்போன்று வெளியாகியுள்ள தகவல்களும் சுட்டிக்காட்டத்தக்கன.

குறிப்பாக, சு.கட்சி–ஜே.வி.பி.யின் கூட்டணியினர் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என கூட்டாக விடுத்த கோரிக்கையையும், இது மட்டுமல்லாது தனியாக சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும், அமைப்பாளர்களும் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என முன்வைத்த கோரிக்கையையும் சனாதிபதி சந்திரிகா ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வகையில் பார்க்கையில் சனாதிபதி சந்திரிகா, தேர்தல் குறித்து ஒரு குழப்பமான நிலையிலேயே உள்ளார் என்பது தெளிவாகின்றது. ஆயினும் சனாதிபதி சந்திரிகா தேர்தல் ஒன்று நடத்துவதில் இருந்து விலகிச் செல்ல முடியாததொரு நிர்ப்பந்தத்திற்கு தற்பொழுது உட்பட்டுள்ளார் என்பதே யதார்த்தமாய் உள்ளது. அவ்வாறு விலகிச் செல்வதாயின் சு.கட்சியின் ஜே.வி.பியுடனான கூட்டு முறிவடைவதற்குப் பெரிதும் வாய்ப்புண்டு.

ஆனால், சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்த முற்படுவாரேயானால் சுதந்திரக் கட்சியோ அன்றி பொ.ஐ.முன்னணியோ இதனால் இலாபம் அடையும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பது இலகுவானதாக இருக்கப் போவதில்லை என்பது மட்டுமல்ல, தற்பொழுதுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை தக்கவைப்பது கூட கடினமாகிவிடலாம். ஏனெனில், ஐ.தே.கட்சி இல்லாது விடினும், ஜே.வி.பி. இவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையைப் பங்கு போட்டுக்கொண்டு விடலாம். இவை சனாதிபதி சந்திரிகாவுக்கும் புரியத் தக்கவையாக உள்ளமையே அவரது குழப்பத்திற்கு காரணமாகும்.

# அமைச்சுக்கள், அரச திணைக்களங்களின் ஊழல் மோசடிகளை மறைக்க அரசு முயற்சி

### -சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக ஊழல் மோசடிகள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்கள் அதிரித்திருப்பதும் ஆட்சி மாற்றம் ஒன்றுக்கான சூழல் உருவாகியிருப்பதையு மடுத்து ஊழல் மோசடிகள் இடம் பெற்றிருக்கும் அமைச்சுக்கள் மற்றும் அரச திணைக்களங்களில் சம்பந்தப்பட்ட கோவைகளையும், ஆவணங்களையும் அமைச்சர் மாரது ஊழியர்களைக் கொண்டு அகற்றிவிடும் நடவடிக்கையொன்று இடம்பெற்று வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடகப்பேச்சாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.

ஊழல், மோசடிகளுக்கு எதிராக எதிர்க்கட்சி சட்ட பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அறிக்கை மூலம் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் உருவாகும் புதிய அரசாங்கம்,ஊழல் மோசடிகள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற் கொள்வதைத்தடுக்கவே இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஊழல்,மோசடிகள் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்பதால் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாதென வலியுறுத்தியிருக்கும் அவர் இப்படியான நடவடிக்கைகளுக்கு உதவி புரியும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராகபுதிய அரசாங்கமொன்றின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மென்றும் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# பொ.ஐ.மு.வுடன் இணைந்து செயற்பட்ட ஆளும் கட்சியினருக்கு பிரதமர் எச்சரிக்கை

(கொழும்பு)

அனைத்து மாகாண சபைகளை ஒரே நேரத்தில் கலைத்து விடுவதாக அமைச்சரவை எடுத்த முடிவிற்கிணங்க தென்மாகாண சபையை கலைத்துவிடக் கூடாது எனக்கோரும் மகஜரில் பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களுடன் சேர்ந்து கையெழுத்திட்டமைக்காக அம்மாகாண ஐ.தேகட்சி உறுப்பினர்கள் சிலரை ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

கடந்த நாலாம் திகதி அலரிமளிகையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது மேற்படி உறுப்பினர்களுக்கெதிராக ஒழுங்காற்று நடவடிக்கை மேற் கொள்ள இருப்பதாக பிரதமர் ரணில் அறிவித்துள்ளார்.

இதன்போது சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தெரிவிக்கையில் தமது கட்சி எடுத்த முடிவுகள் தமக்கு தெரிவிக்கப் படவில்லை எனவும் தென் மாகாணசபை எதிர்க்கட்சிப் பதவியிலிருக்கும் ஐ.தே.க. உறுப்பினர்களும் இதுபற்றி அறிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இக்கூட்டத்தின் போது அமைச்சர் கருஜெயசூரிய வஜிரஅபயவர்தன, மலிக்சமரவிக்ரம, கப்புகொட்டுவ ஆகியோரும் சமுகமளித் திருந்தனர்.

### -காலனித்துவநாடாக மாறும் நிலை நோக்கி-

# இலங்கை சென்று கொண்டிருக்கிறது ஜே.வி.பி.பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

இலங்கை மீண்டும் காலனித்துவ நாடாக மாறும் நிலையை நோகிச் சென்று கொணடிருக்கிறது.

இவ்வாறு ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளரும் தேசப்பற்று தேசிய முன்னணியின் அமைப்புக்குழு உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மகரகம தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேசப்பற்று தேசிய முன்னணியின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்: நாடு தற்போது பிளவுபடும் ஆபத்தான சூழலில் இருக்கிறது. பொருளாதார நெருக்கடிகள் மோசமடைந்து வருகின்றன. தேசிய வளங்கள் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுவதுடன் எமது நாட்டின் கலாச்சாரமும் சீரழிக்கப்படுகிறது.

இவற்றை எல்லாம் தடுத்து நிறுத்துவதற்குப் போராடுவதற்கே தேசப்பற்று தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் வண வெலிகம சிறி ஞானரத்ன தேரோ அமரபுர பீடாதிபதியின் சார்பில் உரையாற்றினார். இதை முன்னாள் பிரதம நீதியரசர் ஆர்.எஸ் வண சுந்தர ஆரம்பித்து வைத்தார்.

# தானத்தைப் பெற்று நித்திரை கொள்ளும் பிக்குகள் நாட்டிற்குத் தேவையில்லை

### -தேசிய சங்க சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

தானத்தை ஏற்றுக் கொண்டு மாலையானதும் நித்திரைக்குச் செல்லும் பிக்குமார் இன்று நாட்டிற்குத் தேவையில்லை. நாட்டையும்,மக்களையும் காப்பாற்றும் பிக்குமாரே இன்றைய தேவை.

இவ்வாறு தேசிய சங்க சம்மேளத்தின் தலைவர் எல்லாவலமேதாந்த தேரர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில; நாம் அரசியல்வாதிகளின் வழியில் செல்லாமல் புத்தரின் வழியினையே பின்பற்ற வேண்டும். நாட்டில் இன்று கிறிஸ்தவ அடிப்படைவாதம் போன்று தமிழ் பிரிவினை வாதமும்தலை தூக்கியுள்ளது.

சிங்கள பௌத்தர்கள் தமது நாடு, இனம், மொழி பற்றிப்பேசும் போது, அது இனவாதம் எனப்படுகின்றது. ஆனால், சிறுபான்மையினர் இப்படிக் கதைக்கும் போது அதைப்பற்றி ஒன்றும் கூறப்படுவதில்லை.

என பௌத்தர்களை பாதுகாக்கும் பொதுக் கூட்டத்தில் தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

### சிறிலங்கா-அவுஸ்திரேலியா

# ஒருநாள் போட்டிக்கு வீரர்கள் தெரிவு

சிறிலங்கா-அவுஸ்ரேதிலிய அணிகளுக்கிடையில் இம்மாதம் நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான 25 பேர் கொண்ட சிறிலங்கா அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விருஅணிக்களுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 20ம் திகதி தம்புள்ளை மைதானத்தில் நடைபெறும்.

அணிவிபரம்: மாவன் அத்தபத்து(அணித்தலைவர்) சனத் ஜயசூரிய ரொமேஷ் களுவிதாரண, குமாரசங்கக்கார, மகேலஜயவர்தன, திலகரட்ன,தில்ஷான், உப்புள்சந்தன சமிந்தவாஸ், குமார் தர்மசேன நுவன் குலசேகர, முத்தையா முரளிதரன், அவிக குணவர்தன, ஜயந்த, சாமரசில்வா, கௌசவ் லொக்க ஆராச்சி, நுவன் சொய்சாரங் கனகேரத், தினுபெர்னான்டோ, கமிலகமகே, தினுஷ் கெட்டியாராச்சி,சரித்த புத்திக பெர்னான்டோ, திலின கண்டம்பி, ருச்சிர பெர்னான்டோ தர்ஷனக மகே, ரசல்ஆனல்ட் ஆகியோர் அடங்குவர்

# சூதாட்ட நிலையம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கண்டி நகரில் சட்ட விரோதமாக நடத்தப்பட்ட சூதாட்ட நிலையம் ஒன்றை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் சுற்றி வளைத்து. 30 நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

கண்டி நகரில் அமைந் துள்ள விடுதி ஒன்றின் மேல்மாடியில் இந்த சூதாட்ட நிலையம் நீண்ட நாட்களாக இயங்கி வந்துள்ளதாக குற்றத்டுப்பு பொலிஸார் கூறியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து பெருந் தொகைப் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# இன்று இரண்டாவது இறுதிப் போட்டி மூன்றாவது போட்டிக்கு வாய்ப்புள்ளதா?

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது இறுதிப் போட்டி இன்று சிட்னியில் நடைபெறுகின்றது. இன்று நடைபெறும் போட்டியில் இந்தியா வெற்றி பெறுவதால் மேலும் ஒரு இறுதிப் போட்டி பேர்த்தில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுடன் கடைசியாக நடைபெற்ற இரு போட்டிகளிலும் மிக மோசமாக ஆடிய இந்திய வீரர்கள் இப்போட்டியில் வெற்றி பெற்றால் V.B கிண்ணம் பற்றி அவர்கள் சிந்திக்கலாம். அத்துடன் இபபோது எங்களின் பக்கம் காற்று வீசுவதாகக் கூறியுள்ள அவுஸ்திரேலிய அணியின்பந்து வீச்சாளர் கிளஸ்பி கூறுவது போல உண் மையானால் இந்தியா வெறுங் கையுடன் வீடு திரும்பலாம்.



# இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்த முன்மொழிவுகள் சிறில. வால் தயாரிப்பு

(கொழும்பு)

இந்திய- சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்த முன்மொழிவுகள், சிறிலங்கா தரப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த முன்மொழிவுகள் எதிர் வரும் வாரத்தில் இந்தியத்தரப்பிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தியவிஜயத்தை மேற்கொண்டபிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த நாட்டுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொள்ளும் ஆலோசனையை வகுத்தார் அந்த வேளையில் அரசாங்கத்தின் கீழேயே பாதுகாப்பு அமைச்சு இருந்தது. சனாதிபதியின் கீழ் பாதுகாப்பு அமைச்சு வந்தபோது ஒப்பந்த நகர்வுகள் தாமதமின்றி முன்னெடுக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத் கடந்த மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பியதும் தெரிந்ததே. (32)

# கணினி அறிமுகவகுப்பில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தமிழீழ மாணவர் அமைப்பினால் வடமராட்சி கிழக்குப் பகுதி பாடசால ல மாணவர்களுக்கு கணினி அறிமுகவகுப்பு கடந்த பத்து நாட்களாக நடைபெற்று இதில் கலந்துகொண்ட மாணவர்களுக்




கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யா/மருதங்கேணி இ.த.க. பாடசாலையில் கிளி.மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கௌரி தலைமையில் நடை பெற்றது.

பொதுச் சுடரினை காவல்துறை சீர்திருத்தத்துறை பொறுப்பாளர் நரேன் யா/உடுத்துறை ம.வி.அதிபர் அரியகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றி வைத்தார்.

சிறப்புரைகளை, கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் பூரணி தளபதி மங்களேஸ், காவல்துறை சீர்திருத்தத்துறை பொறுப்பாளர் நரேன் ஆகியோர் ஆற்றினர்.

இதில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது இக் கருத்தமர்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர் என 250க்கு மேற்பட்டோர் கலந்து பயனடைந்தனர்.

# தற்போதைய அரசாங்கத்துடன் இணக்கப்பாடு ஏற்படுத்துவதால் பயனில்லையாம்

## புத்திஜீவிகள் கூறுவதாக அரசவானொலி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்துடன் எதிர்க்கட்சியினர் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதில் நாட்டுக்கோ மக்களுக்கோ எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்று தென்பகுதி புத்திஜீவிகள் தெரிவித்துள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியறிக்கை தெரிவிக்கின்றது.

தற்போதைய அரசியல் பிரச்சினைக்கு தேர்தல் ஒன்றே உரிய வழியாகும் என்று டாக்டர் சுரவீரசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் எழுத்தாளர் முன்னணியின செயலாளர் குணசேன விதான கருத்துக் கூறுகையில், அரசாங்கத்துறையில் இப்பொழுது அனைத்துமே ஊழல் நிறைந்ததாகவும் செயற்பாடு அற்றதாகவும் மாறிவிட்டன. பாராளுமன்றத்தைக் கலைத்து மக்கள் தங்களது அதியுயர் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றார்.

# வவுனியா கலை கலாச்சாரத்தை வளர்க்க கலாச்சார மண்டபம் அவசியம்

## - வ்வு.கல்வியல் கல்லூரி பீடாதிபதி தெரிவிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தின் கலை கலைச்சாரத்தை கட்டுக் கோப்புடன் வளர்ப்பதற்கு கட்டாயமாக சகல வசதிகளையும் கொண்ட கலாச்சார மண்டபம் ஒன்று அவசியம் என்று வவுனியா கல்வியல் கல்லூரி பீடாதிபதி பேனாட் கடந்த வியாழக் கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற செல்வி நாகலோஜி விஜயசிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது, எமது கலை கலாச்சார பாரம பரியங்களினை பேணிப்பாதுகாக்க வேண்டும். இன்று சினிமா, தொலைக்காட்சி தொடர்கள் என்று மக்கள் தமது பொழுதினை கழித்துக் கொண்டு உள்ளனர். இது மாறவேண்டும். இதற்கு வவுனியா வாழ் அனைவரும் ஒன்று இணைந்து செயற்படுவது முக்கியமான ஒன்றாகும். இதற்கு முக்கியமாக சகல வசதிகளையும் கொண்ட கலாச்சார மண்டபம் ஒன்று அவசியமாகாத் தேவை என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய வவு. மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கலாச்சார மண்டபம் தொடர்பாக கவனம் எடுக்கப்பட்டு இருப்பதாகவும் சகல வசதிகளையும் கொண்ட மண்டபம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு திட்டம் தீட்டி அறிக்கை தயாரிக் கப்பட்டதாகவும் எனினும் நிதி பற்றாக்குறை, பல்வேறு சிக்கல்கள் காரணமாக கை கூடவில்லை என்றும் இது தொடர்பாக தொடர்ந்தும் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித தார். இந்தக் கலாச்சார மண்டபம் 20 மில்லியன் ரூபாவில் அமைக்கப் படும் என்றும் தெரிவித்தார்.

வவுனியாவுக்கு என்று அமைக் கப்பட்ட கல்யாண மண்டபம் இராணுவம் நிலை கொண்டு இருப்பதால் மண்டபம் கட்டப்பட்டதற்கு இதுவரை ஒரு நிகழ்வும் நடத்தப் படாமல் இருக்கின்றமை குறிப் பிடத்தக்கது. புரிந்துணர்வு உடன் படிக்கையின் பிரகாரம் பொது கட்டடங்களில் இருந்து இராணுவம் வெளியேறியிருக்க வேண்டும். எனினும் இராணுவம் தொடர்ந்தும் கல்யாண மண்டபத்தில் நிலை கொண்டு இருப்பதானது மக்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (21)

### பாராளு..

அனைத்து மாகாணசபைகளும் கலைக்கப்படலாம் என்ற செய்தி வெளியாகியுள்ள நிலையில் சனாதிபதி அமைச்சரவையைப் பொறுப்பேற்கலாமா? என்ற செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை நாளை சனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரின் இணக்க பேச்சுவார்த்தையைப் பொறுத்து முக்கிய தமிழ்க் கட்சியான தமிழ் கூட்டமைப்புடன் ஏதாவது ஒரு இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் இறுதிக்கட்ட நடவடிக்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தை சனாதிபதி கலைப்பதற்கான திட்டத்தைக் கொண்டிருப்பதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எந்தத் தகவல்களும் உறுதிப் படுத்தப்படாத தகவல்களாகவே வெளிவந்திருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (32)

# தடைப்பட்ட உதவிகளைப் பெற பிரதமர் விசேட திட்டம் தயாரிப்பு!

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு உறுதியளிக்கப்பட்ட 2500 கோடி ரூபா உதவித் தொகை அரசியல் நெருக்கடி காரணமாக தடைப்பட்டுள்ளதால் அதனைப் பெற்றுக் கொள்வதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட திட்டமொன்றைத் தயாரித்துள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளுடன் பிரதமர் ரணில் ஏற்கனவே பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

அடுத்த மாதம் அந்த நாடுகளின் மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. இதேவேளை சிறிலங்காவிற்கு 45.000 கோடி ரூபாவை கடனாக வழங்க உறுதியளித்த நாடுகளின் தலைவர்கள் இம்மாதம் 17ஆம் திகதி அமெரிக்க நகரான வாஷிங்டனில் கூடி பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர்.

## -சிறிலங்காவில் முதலீட்டை-

# அதிகரிப்பதுபற்றி ஆராய ஜப்.,தாய்லாந்தில் மாநாடுகள்

(கொழும்பு)

''சிறிலங்காவில் மூலதனம் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பது தாய்லாந்து-ஜப்பான்கூட்டுக்கைத்தொழில் முயற்சிகளை சிறிலங்காவில் ஆரம்பிப்பது போன்றவற்றை ஆராய்வதற்கான இரண்டு மாநாடுகள் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கிலும் ஜப்பானிலும் அடுத்த வாரம் இடம்பெற இருக்கின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான தூதுக்குழு ஒன்று அடுத்த வாரம் தாய்லாந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்காக செல்ல வுள்ளது.

ஜப்பானிய மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள சிறிலங்கா தூதுக் குழுவிற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமைதாங்கவுள்ளார்.

சிறிலங்காவில் புதிய கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்வரும் சிறிலங்காவின் முதலீட்டாளர்களுக்குத் தேவையான வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது, சிறிலங்காவின் உற்பத்திகளுக்காக வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்வது போன்றவை இந்த இரண்டு மாநாடுகளின் நோக்கங்களாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வை.கோ. விடுதலையை எதிர்த்து. தமிழக அரசு வழக்குத்தாக்கல்

(சென்னை)

தமிழக அரசு வைகோவின் பிணை விடுதலையை எதிர்த்து சென்னைஉயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளது.

தொடர்ந்து தடைசெய்யப்பட்ட இணக்கமான விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசியவர், புலிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர் எனவே அவரது பிணைமனுவை ரத்து செய்யவேண்டும் என்று தமிழக அரசு தனது மனுவில் கூறியுள்ளது.

இதனிடையே நக்கீரன் நிருபரான சுப்பு என்கின்ற சுப்பிரமணியன் தமிழ்நாடு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். வீரப்பன் தொடர்பான இருவேறு வழக்குகளில் அவருக்கு பங்கு உள்ளது என தமிழக பொலிசார்தெரிவித்துள்ளனர். வீரப்பன் விவகாரமாக கைது செய்யப்படும் மூன்றாவது நக்கீரன் நிருபர் சுப்புஎன்பது குறிப்பிடத்தக்கது.

# துணுக்காய் பிரதேசத்தில் சமகாலக் கருத்தரங்கு

(மல்லாவி)

முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேசத்தில் சமகால கருத்தரங்கு மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் தேசிய எழுச்சி பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கருத்துரைகளை துணுக்காய் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் த.தர்மேந்திரா, முல்லை. மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி பாகுவேணி முல்லை மாவட்ட பெண்கள் மேம்பாட்டு பொறுப்பாளர் அன்பரசி ஆகியோர் வழங்கினர்.

இவ் நிகழ்வுக்கு துணுக்காய் பிரதேச செயலர் திருமதி.ப.ப. தியாகராஜா -கிராம சேவையாளர், சோ.தேவதாசன், தே.எ.பேரவை- உறுப்பினர்கள், ஊரக தேசிய எழுச்சி அங்கத்தவர், வர்த்தக சங்கப் பணியாளர்கள், உறுப்பினர்கள், கிராம அமைப்பு தலைவர்கள், பெண்கள் மேம்பாட்டு பிரதிநிதிகள், மாதர் சங்கம் கிராம அபிவிருத்தி சங்கம் பிரதிநிதிகள் என 100க்கு மேற்பட்ட வர்கள் கலந்து கெண்டனர். (24)

### கறுப்புக்...

இருக்கும் படையினர் கூறிவருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை படையதிகாரி ஒருவர் அவ்வாறு கறுப்புக்கொடிகளை ஏற்றிய மீனவர்களை தான் பிடித்தால், அவர்களைக்கட்டி கடலினுள் வீசிவிடப்போவதாக அச்சுறுத்தியுள்ளார்.

எனினும் சிறிலங்காவின் சுதந்திரதினத்தன்று படையினரின் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மத்தியிலும் கரையோர வீதிகளில் மீனவர்களால் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (27)

### வடக்கு..

னையடுத்தே ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான ஜோண் வோல்ஸ் குஸ்ணர்கான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில்தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினரும்ஜோண் வோல்ஸ் குஸ்ணர்கான் (ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்), பியோர்றிபே (பெல்ஜியத்திற்கான நோர்வே தூதுவர்) மரிகோஉ ( ஆசிய திணைக்களத்தின் தலைவர்), வெளிநாட்டமைச்சர் ஆகியோர் ஐரோப்பிய பாராளுமன்றம் சார்பிலும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.